

சென்னை மாநகரில் மின் கட்டமைப்பை மேம்படுத்த கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கணேஷ் நகர் பகுதியில் 230/33 கிவோ துணை மின் நிலையம் அமைக்கும் பணி தமிழக முதல்வர் அவர்களால் 13.5.2023 அன்று துவங்கப்பட்டது. அப்பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வு 3.11.2023 அன்று நடைபெற்றது. இத்துணை மின்நிலையம் அமைவதால் கணேஷ் நகர், நேர்மை நகர், கொளத்தூர், பெரியார் நகர் மற்றும் விநாயகபுரம் பகுதிகளை சேர்ந்த 3.19 இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.ஆய்வில் மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு , மின் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி மற்றும் உயர் அதிகாரிகள், பகுதிச் செயலாளர்கள் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி. மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




சென்னையில் நேற்று முன்தினம் தமிழ்நாடு மின்வாரியத் தலைமை அலுவலகத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தமிழ்நாடு முழுவதும் சீரான மின் விநியோகம் வழங்குதல் மற்றும் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள மின்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களிடையே காணொலிக் காட்சி வாயிலாக விரிவான ஆய்வினை மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி அனைத்து இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோவை - இருகூர் பேரூராட்சி

# தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம்!

## அமைச்சர் சு.முத்துச்சாமி பங்கேற்பு

கோவை, நவ. 6 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்டம் சூலூர் ஒன்றியம் இருகூர் பேரூர் கழகம் சார்பில் பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு தினசரி காலை உணவு வழங்கும் திட்டத்தை இருகூர் பேரூராட்சி அலுவலகத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், நகர்புற வளர்ச்சி, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துச்சாமி துவங்கி வைத்து சிறப்புரையாற்றி னார்.

இந்நிகழ்ச்சிக்கு தலைமை செயற்குழு உறுப்பினரும், இருகூர் பேரூராட்சி தலைவருமான ஆ.சந்திரன் தலைமை தாங்கினார். பேரூர் கழக செயலாளர் இரா.தீனதயாளன் வரவேற்று பேசினார்,

கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், மாவட்ட மீனவரணி அமைப்பாளர் இருகூர். செந்தில், ஜெயகுமார், பெ. இராஜேந்திரன், இ.க. இளஞ்செழியன், உதயபூபதி, இரா.ராஜேந்திரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உலக தமிழர்களின் பாதுகாவலர் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து துறைகளிலும் தலை நிமிர செய்து ஐம்பது ஆண்டு காலம் உழைத்து மறைந்தார்.

அவருடைய வளர்ச்சி திட்டங்களால், அன்பினால், கட்டுக்கோப்பால் இருகூர் மக்கள் தி.மு.கழகத்தினால் அடைந்த ஒட்டுமொத்த வளர்ச்சிகளான குடிநீர், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, என அனைத்து வசதிகளும் கிடைக்க செய்த மாமனிதர் கலைஞர் அவர்கள். இறுதியாக சுமார் ஐம்பது கோடி ரூபாய் மதிப்பில் இரண்டு மேம்பாலங்கள் கட்டி தந்து மக்களை மகிழ்ச்சியடைய செய்தார்.

தி.மு.கழகத்தின் உயிர் மூச்சு கலைஞர் அவர்கள் ஓய்வு எடுத்ததிலிருந்து அவருடைய நினைவாக தொடர்ந்து 1204 நாட்கள் ஆதரவற்ற முதியோர்களுக்கு இருகூர் தி.மு.கழகத்தின் சார்பில் தினந்தோறும் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இதனை தொடர்ந்து அவருடைய கருணை, பாச உணர்வில் அவரது நிழலாக தமிழினத்தையும், திராவிட இயக்கத்தையும் வழி நடத்தி கொண்டு இருக்கும் நம் குடும்ப தலைவரும், தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் தளபதி அவர்களுடைய பல்வேறு நலத்திட்டங்கள் மூலமாக தமிழக மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

முதல்வரின் பலநாள் கனவை நிறைவேற்றும் வகையில் உள்ளாட்சியில் தூய்மை பணியாளர்களின் குழந்தைகளின் படிப்பு மேன்மையடைய வேண்டும் அதன் அடிப்படை தேவை காலை உணவு அது கிடைப்பதின் மூலமாக குழந்தைகள் கண்டிப்பாக பள்ளிக்கு வரும் என நோக்கில் பள்ளியில் காலை உணவு திட்டத்தை முதல்வர் அவர்கள் அமல்படுதினார்.

மேலும் முதல்வர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களை மனதில் வைத்து பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கியதை போல், அந்த தூய்மை பணியாளர்களுக்கும் காலை உணவு வழங்க வேண்டும் என்று திட்டம் தீட்டி கோவை இருகூர் தி.மு.கழகத்தின் சார்பில் காலம் முழுவதும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இதனால் பேரூராட்சியின் சுகாதார தூய்மையும் மேம்படும், இந்த திட்டத்தை துவங்கி வைக்க மாண்புமிகு அமைச்சர் சு.முத்துச்சாமி மிகுந்த மகிழ்ச்சியோடு வந்து துவங்கி வைத்து தனது சார்பாகவும் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ரகுநாதன், நீலாம்பூர் சீனிவாசன், வெங்கடாபுரம் நடராஜன், இருகூர் பேரூராட்சி அலுவலர்கள், மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை இருகூர் பேரூர்க் கழக நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

### அரியலூர் மாவட்டத்தில் மொழிப்போர்த் தியாகி

# கீழப்பழுவூர் சின்னசாமி திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைத்தல் பணி!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்!

அரியலூர், நவ. 6 -

அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூர் கிராமத்தில் மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைத்தல் பணியினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திரப் போரட்ட வீரர்கள், தியாகிகள் மற்றும் மொழிப்போர் தியாகிகளை சிறப்பிக்கும் வகையில் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு அதனை செயல்படுத்தி வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாக கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானிய கோரிக்கையில் 110 விதியின் கீழ் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்த தமிழ்மொழி மீது தீராத பற்றுக்கொண்டு இந்தி திணிப்பினை எதிர்த்து போராடி முதன் முதலில் உயிர் தியாகம் செய்த கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களுக்கு அரியலூர் மாவட்டத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்கள். அதனைத் தொடர்ந்து சிலையுடன் கூடிய அரங்கம் அமைப்பது தொடர்பான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றையதினம் அரியலூர் மாவட்டம், மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கும் பணியினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களின் அரங்கத்திற்கு அடிக்கல் நாட்டியபின் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்விணங்க இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தில் தமிழ் மொழிக்காக முதன் முதலில் தனது இன்னுயிரை இழந்து மொழிப்போர் போராட்டத்தை வெளிபடுத்தியவர் மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்கள். அரியலூர் மாவட்டத்திற்கு மொழிப்போர் போராட்டத்தில் மிகப்பெரிய வரலாற்றை ஏற்படுத்தி கொடுத்தவர். அவருடைய நினைவாக அவரது சொந்த ஊரான கீழப்பழுவூரில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான அரங்கம் அமைப்பதற்கான கால்கோல் விழா இன்றையதினம் நடத்தப்பட்டுள்ளது. இவ்வரங்கம் ரூ.3 கோடி மதிப்பில் சுற்றுச்சுவருடன், அரங்கம் சுற்றிலும் பேவர் பிளாக் அமைக்கப்பட உள்ளது.

இந்த அரங்கமானது மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களுடைய புகழ் பாடும் வகையிலும், இந்த பகுதிக்குக்கு வருகை புரிபவர்களுக்கும், அரியலூர் மாவட்டத்திற்கு வருகை புரிபவர்களுக்கும் அவரது நினைவை நிலை நிறுத்தும் வகையிலும் அமைய உள்ளது என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகர், லதாபாலு, ஒன்றிய கழக செயலாளர்கள் இரா.கென்னடி, ரெ.அசோகசக்ரவர்த்தி, நகர கழக செயலாளர் இரா.முருகேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன்,

ஒன்றிய பெருந்தலைவர் சுமதி அசோகசக்ரவர்த்தி,

மாவட்ட கவுன்சிலர் கீதா ஜெயவேல், மாவட்ட பிரதிநிதிகள் மு.முத்தமிழ் செல்வன், ஆர்.ஜி.மணிவேல், சி.ஆரோக்கியம், கோ.கனகராஜ்,

ஒன்றிய அவைதலைவர் நெப்போலியன் லூர்துசாமி, ஒன்றிய துணை செயலாளர்கள் க.ரவி, ராஜா, மனோஜ், ஒன்றிய பொருளாளர் எம்.செல்வம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர்.முருகேசன்

மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் உ.கருணாநிதி

மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செல்வ.பிரபாகரன் ஒன்றிய தகவல்தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அருண் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அருண், அப்துல்லா, உதவி செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை அன்பரசி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சுருளி பிரபு, அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூரில் ரூ.25 லட்சம் சொந்த செலவில்

# நரிக்குறவர்கள் 25 ஜோடிகளுக்கு சீர்வரிசையுடன் திருமணம்!

## ஆ.இராசா. எம்.பி. நடத்தி வைத்தார். குன்னம் சி இராஜேந்திரன் - எம். பிரபாகரன் பங்கேற்பு!

பெரம்பலூர், நவ 6 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்டத்தில் வசிக்கும் நரிக்குறவர்கள் சமுதாயத்தைச் சேர்ந்த 25 ஜோடிகளுக்கு ரூ.25 லட்சம் மதிப்பிலான சீர்வரிசை பொருட்களை தனது சொந்த செலவில் வழங்கி திருமணம் செய்து வைத்தார் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி.

ஜே.கே.மகால் திருமண மண்டபத்தில் சீர்திருத்த திருமணத்தை நடத்தி வைத்து அவர் பேசியது வருமாறு:-

திருநங்கைகள், நரிக்குறவர்கள் உள்ளிட்ட விளிம்பு நிலையில், ஒடுக்கப்பட்ட நிலையில் உள்ள மக்களுக்கு சமத்துவம் வர வேண்டும் என்பதற்காக திட்டங்கள் கொண்டு வந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

தற்போது திராவிட மாடல் ஆட்சி நடைபெற்று வருகிறது.

“ஜெய்பீம் ‘ சினிமா பார்த்துவிட்டு அந்த படத்தில் வரும் காட்சிகளில் விளிம்பு நிலையில் உள்ள மக்கள் எவ்வளவு பாதிக்கப் படுகிறார்கள் என்று நினைத்து, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

நரிக்குறவர்கள் வீட்டிற்கு சென்று குறைகளை தீர்த்து வைக்கிறார். வேலை வாய்ப்பு, பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறார்.

நரிக்குறவர்கள் மக்களுக்காக தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தி வருவதாக கூறிய அவர், வரும் காலங்களில் நரிக்குறவ மக்கள் தி.மு.க.விற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ. இராசா.எம்.பி. பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் செ.வல்லபன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இர.ப.பரமேஷ்குமார், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் வி. எஸ்.பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், ந.ஜெகதீஷ்வரன், எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், ஒன்றிய செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, ம.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், துணை பெருந்தலைவர் எம்.ரெங்கராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ர மணியன், மா.பிரபாகரன், ஆர். அருண், தொ.மு.ச. பேரவை மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர்.ரெங்கசாமி,

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி. இராசா, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், நகர் மன்ற உறுப்பினர்கள் ரகமத்துல்லா, நல்லுசாமி, சித்தார்த், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பா.ரினோபாஸ்டின், கிருஷ்ணாஇள, ராகவி ரவிக்குமார், தமிழ்வேந்தன், அ.இளையராஜா,

மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் கோபி கிருஷ்ணா,

நரிக்குறவர்கள் சங்க மாநில பொதுச்செயலாளர்

மலையப்ப நகர் ஆர். சிவக்குமார், எறையூர் பகுதி நரிக்குறவர்கள் நம்பியார், பாபு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பழங்குடியினர் மாநில தலைவர் அதியமான் நன்றியுரையாற்றினார்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் நகராட்சி பகுதியில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தல் சிறப்பு முகாம் நடைபெறுவதையொட்டி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி மற்றும் தொகுதி பார்வையாளர், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் டாக்டர்.ஏ.கே.தருண் முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் ரேணுகா தேவி, நகர கழக அவைத்தலைவர் அழகுவேல், துணைச் செயலாளர்கள் முல்லைவேந்தன், அன்பழகன் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ரஹீம், காசிநாதன், எம்.பி.கௌதம் மற்றும் நிர்வாகிகள், கிளை செயலாளர்கள், பாக முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திருவாரூரில் மறைந்த ஆர்.பி.சுப்பிரமணியன் இறுதி ஊர்வலம்!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் கழகத்தினர் பங்கேற்றனர்!

திருவாரூர், நவ 6 -

திருவாரூர் முன்னாள் ஒன்றிய செயலாளர் ஆர். பி.எஸ்.என்று அழைக்கப்படும் ஆர்.பி.சுப்பிரமணியன் மறைவெய்தினார். மறைந்த ஆர்.பி.எஸ். அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களிடம் மறாப் பற்றுகொண்டிருந்தவர், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர் பகுதியின் கழக வளர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர். திருவாரூர் ஒன்றிய கழக நிர்வாகியாக பலமுறை இருந்து கழக நிகழ்வுகளை திறம்பட நடத்தி, மாவட்ட கழகத்தின் நன்மதிப்பை பெற்றவரும் ஆவார்.

மறைந்த ஆர்.பி.எஸ். என்று அழைக்கப்படும் ஆர்.பி.சுப்பிரமணியன் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்விற்கு மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் தலைமயில் அமைதி ஊர்வலம் வாள வாய்க்கால் பாலத்தில் இருந்து புறப்பட்டது. புலிவலம் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த ஆர். பி.சுப்பிரமணியன் அவர்களின் உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் அனைவரும் பங்கேற்று புகழஞ்சலி செலுத்தினர்.

இந்த இறுதி அஞ்சலி நிகழ்வில் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன், முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி எ.கே.எஸ்.விஜயன், குத்தாலம் கல்யாணம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜ மாணிக்கம், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலிய பெருமாள், ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா, திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், பொருளாளர் மு.வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ப.ஆடலரசன், ஆர்.எஸ்.பாண்டியன், கோ.செல்வம், பொதுக்குழு உறுப்பினர்கள் காஞ்சித்துரை, கலைவாணி மோகன், செல்வ ஜெயதேவன், ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், எஸ்.ஜோதிராமன், ஆர்.பாலச்சந்திரன், வீ. எஸ்.ஆர்.தேவதாஸ், பால. ஞானவேல், ஐ.வி.குமரேசன், டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கேவி.கே.ஆனந்த், கோ.தட் சிணா மூர்த்தி, பிரபாகரன், வே.மனோகரன், கேப்டன் .செல்வராஜ், ப.பிரகாஷ், இரா. மனோகரன், நகர செயலாளர்கள் வாரை.எஸ்.பிரகாஷ், வீரா.கணேசன், ப.சிவநேசன், எஸ்.வி.பக்கிரிசாமி, நன்னிலம் பக்கிரிசாமி, பேரளம்சிவ.தியாகு, கொரடாச்சேரி பூண்டி. கே.கலைவேந்தன், ஒன்றியக்குழு தலைவர் சோம. செந்தமிழ் செல்வன், நகர் மன்ற தலைவர்கள் மன்னை.தா.சோழராஜன், கவிதா பாண்டியன், புவனப்ரியா செந்தில், மும்தாஜ் நவாஸ்கான், உமாப்ரியா பாலச்சந்திரன், மற்றும்மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.



திருப்பூர் மாநகராட்சி, 47வது வார்டு விஜயாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில், பள்ளிக் கல்வித்துறை சார்பில் ரூ.1.55 கோடி மதிப்பீட்டில், 8 புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கான பணிகளை திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மண்டலத் தலைவர் சி.கோவிந்தசாமி, பகுதி செயலாளர் மேங்கோ அபழனிச்சாமி, வட்டக் கழக செயலாளர் வெங்கட்ராஜா, மாமன்ற உறுப்பினர் ஜெயசுதா பூபதி உள்பட கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.